இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்
PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 149 | இதழ் : 01 | திகதி : 19.01.2025 | விலை : 50.00

## யாழ். ஆயரினால் யூபிலி ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வத்திக்கான் பேதுரு பெருங்கோவிலில் 24ஆம் திகதி கிறிஸ்து பிறப்புவிழா நள்ளிரவு த்திருப்பலிக்கு முன்பாக புனிதக் கதவைத் திறந்து யூபிலி ஆண்டை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். இதனை த்தொடர்ந்து மறைமாவட்ட ரீதியாக யூபிலி ஆரம்ப நிகழ்வுகள் கடந்த 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட நிலையில் யாழ். மறைமாவட்டத்தில் யூபிலி ஆண்டு ஆரம்ப நிகழ்வு மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றது.

பேராலயப் பங்குத்தந்தையும் யாழ். மறைக்கோட்ட முதல்வருமான அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் யூபிலிக் கதவைத் திறந்து யூபிலிச் சிலுவையை ஆசீர்வதித்து யூபிலி ஆண்டை அங்குரார்ப்பணம் செய்துவைத்து த்திருப்பலி ஒப்புக்கொடுத்தார். இந்நிகழ்வில் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம், மறைமாவட்ட நிதி முகாமையாளர் அருட்தந்தை நேசநாயகம், மறைமாவட்ட மறைநதி கத்தோலிக்க ஊடக மைய இயக்குநர் அருட்தந்தை அன்ரன் ஸ்ரிபன், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், இறைமக்களெனப் பலரும் கலந்து செபித்தனர்.



## 'நாடகக்கீர்த்தி' விருது பெறும் திரு. யோண்சன் ராஜ்குமார்




இலங்கை புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், கலைக்கழகம் மற்றும் அரச நாடக ஆலோசனைக் குழு இணைந்து முன்னெடுத்த 2024ஆம் ஆண்டிற்கான அரச நாடக விருது வழங்கும் நிகழ்வு கடந்த 23ஆம் திகதி கொழும்பு, நெலும் பொகுன கலையரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ். திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் திரு.யோண்சன் ராஜ்குமார் அவர்கள் நாடகத்துறையில் வழங்கப்படும் அரச உயர் விருதுகளில் ஒன்றான நாடகக்கீர்த்தி விருதினைப் பெற்றுக்கொண்டார். இவ்விருதினைப் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி அவர்கள் வழங்கிவைத்ததுடன் இந்நிகழ்வில் இவ்விருதினைப் பெற்றுக்கொண்ட ஒரே ஒரு தமிழ்க் கலைஞர் இவரென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

திரு. ஜோன்சன் ராஜ்குமார் அவர்கள் நாடகக் கற்கைநெறியின் யாழ் கல்விவலய ஆசிரிய ஆலோசகராக ப.2

## வத்திக்கான் புனித பேதுரு பெருங்கோவில் புனிதக் கதவு வழியாகப் பயணித்த ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான திருப்பயணிகள்





மார்கழி மாதம் 24ஆம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் வத்திக்கான் புனித பேதுரு பெருங்கோவிலில் திறந்துவைக்கப்பட்ட புனிதக் கதவு வழியாகக் கடந்த இருவாரத்தில் 545, 532 பேர் கடந்து சென்றுள்ளதாக யூபிலி அலுவலகத்திற்குப் பொறுப்பான நற்செய்தி அறிவிப்புத் திருப்பீடத்துறையின் இணைத்தலைவர் பேராயர் றைனோ பிஷெலா அறிவித்தார். பெரிய அளவில் திருப்பயணிகள் ஆர்வம் காட்டி புனிதக் கதவுக்குள் நுழைவது, உரோம் நகரில் நிலவும் பாதுகாப்பின் உறுதித்தன்மையை உணர்த்துவதாக உள்ளதெனத் தெரிவித்த பேராயர், வத்திக்கானின் பாதுகாப்புத்துறை, இத்தாலியக் காவல்துறை, உரோம் நிர்வாகம் ஆகியவைகளின் ஒத்துழைப்பையும் பாராட்டியுள்ளார். தொடர்ந்து திருப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்ற நம்பிக்கையையும் வெளியிட்ட பேராயர் றைனோ பிஷெலா அவர்கள், ஜனவரி மாதம் 5ஆம் திகதி உரோம் நகரின் புனித பவுல் பெருங்கோவிலின் புனிதக் கதவு திறக்கப்பட்டதிலிருந்து உரோம் நகரின் அனைத்து நான்கு பெருங்கோவில்களின் புனிதக்கதவு வழியாகவும் திருப்பயணிகள் சென்று பலனடைந்து வருகின்றனர் எனவும் மேலும் தெரிவித்தார்.

## முதன்முறையாகத் திருப்பீடத்துறையின் தலைவராக ஓர் அருள்சகோதரி



ஒரு திருப்பீடத் துறையின் செயலராக நியமிக்கப்பட்ட இரண்டாவது பெண்துறவியான சிமொனா பிரம்பில்லா அவர்கள், ஒரு திருப்பீடத்துறையின் தலைவராக நியமிக்கப்படும் முதல் பெண்துறவியாவார். திரு அவை வரலாற்றில் முதன் முறையாக ஒரு பெண் துறவறத்தாரை திருப்பீடத்துறை ஒன்றின் தலைவராக நியமித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். கொன்சலாத்தா மறைப்பணி துறவுசபையைச் சேர்ந்த இத்தாலியப் பெண் துறவி சிமொனா பிரம்பில்லா அவர்களை, அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு நிறுவனங்கள் மற்றும் அப்போஸ்தலிக்க வாழ்வு அமைப்புக்களுக்கான திருப்பீடத்துறையின் தலைவராக நியமித்ததோடு, அதே துறையின் இணைத்தலைவராகக் கர்தினால் ஏஞ்சல் பெர்னாண்டஸ் அவர்களையும் நியமித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். ஏற்கனவே 2011ஆம் ஆண்டிலிருந்து 2023ஆம் ஆண்டுவரை கொன்சலாத்தா துறவுசபையின் தலைவியாகச் செயல்பட்டு வழி ப.2

## கனடா பாராளுமன்ற உறுப்பினர் யாழ். ஆயருடன் சந்திப்பு



கனடா பாராளுமன்ற உறுப்பினரும் முடிக்குரியோர் மற்றும் பூர்வகுடியினர் உறவு களுக்கா அமைச்சருமான திரு.கரி ஆனந்தசங்கரி அவர்கள் இலங்கைக்கு விஜ யம் மேற்கொண்ட நிலையில் யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பு கடந்த 09ஆம் திகதி யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

## சட்ட ஒழுங்குக்கான அமைச்சர் பொலிஸ்மா அதிபர் யாழ். ஆயருடன் சந்திப்பு



இலங்கைச் சட்ட ஒழுங்குக்கான அமைச்சர் கௌரவ ஆனந்த விஜயபால மற்றும் பொலிஸ்மா அதிபர் பியந்த வீரசூரிய ஆகியோர் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் கடந்த 03ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற இச்சந்திப்பில் சட்ட ஒழுங்குக்கான அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனிவிரத்ன அவர்களும் கலந்துகொண்டார்.

அத்துடன் பலாலி வான்படைக் கட்டளைத்தளபதி குமாரசிறி அவர்களும் யாழ். மறைமாவட்ட ஆயரை அன்றைய தினம் யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் சந்தித்து க்கலந்துரையாடியுள்ளார்.

## மானிப்பாயில் அருட்தந்தை மேரி பஸ்ரியன் அவர்களின் 40ஆவது ஆண்டு நினைவு



மன்னார் வங்காலை புனித அன்னாள் ஆலயத்தில் இலங்கை படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட அருட்தந்தை மேரி பஸ்ரியன் அவர்களின் 40ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு மானிப்பாய் புனித அன்னாள் ஆலய அருட்தந்தை மேரி பஸ்ரியன் நிதியத்தினரினால் முன்னெடுக்கப்பட்ட அஞ்சலி நிகழ்வு கடந்த 05ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை றெக்ஸ் சவுந்தரா அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களின் தலைமையில் திருப்பலியும் தொடர்ந்து அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெற்றன. இவ் அஞ்சலி ப.2

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## திருஅவையில் யூபிலி ஆண்டு?

திருஅவை வரலாற்றில் யூபிலி கொண்டாடும் வழக்கம் 13-ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்டது. ஓர் ஆண்டு புனித ஆண்டாக அறிவிக்கப்பட்டு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்வாண்டில் பாவங்களுக்குரிய தண்டனை நீக்கம் திருத்தந்தையால் வழங்கப்பட்டது. அதிலிருந்து யூபிலி ஆண்டு ஆண்டவரின் இரக்கத்தையும் மீட்பின் பேறுபலன்களையும் மிகுதியாகப் பெறும் ஆண்டாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இது புனித ஆண்டு என்றும் அழைக்கப்படுகிறது.

கி.பி. 1550 இல் யூபிலி ஆண்டில் புனித வாயில் திறக்கும் பழக்கமும் ஏற்பட்டது. இவ்வாண்டு புனித பேதுரு, புனித பவுல், புனித மேரி மேஜர், புனித இலாத்தரன் பேராலயங்களில் புனித வாயில்கள் எக்காள முழக்கத்தோடு திறக் கப்பட்டன. இவ்வாயில்கள் வழி நுழைவது மனிதர்களின் வாழ்வுப் பயணம். இறைவனை நோக்கிய ஆன்மிகப் பயணம் என்பதையும், இறைக்குடும்பத்தின் உறுப்பினர்கள், இறைவனுக்குச் சொந்தமானவர்கள் இவர்கள் என்பதையும் குறித்துக் காட்டுகின்றது, கி.பி. 2025, இவ் ஆண்டில் நாம் கொண்டாடுகின்ற யூபிலி 29 வது யூபிலியாகும்.

யூபிலி என்பது மகிழ்ச்சி, அது நமக்கு நன்றி கொண்டாட்டம். திருவிவிலியத்தில் யூபிலியானது சமூக நீதி, ஒப்புரவு. விடுதலை ஆகியவற்றின் கொண்டாட்டமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. “திருஅவைக்கு யூபிலி என்பது சுருக்கமாக ஆண்டவர் அருள்தரும் ஆண்டாகும். பாவ மன்னிப்பு, பாவங்களுக்குரிய தண்டனை நீக்கம். பிணக்கம் கொண்டோர்கிடையே இணக்கம், நிறைந்த மனமாற்றம்... போன்றவற்றிற்குரிய ஆண்டாகும். மற்றக் காலங்களைவிட மிகுதியாகப் பேறுபலன்களை வழங்குதல் யூபிலி ஆண்டுகளின் மரபாகும்.

மனிதாவதாரத்தை நினைவுகூரும் யூபிலிகளோடு 100, 50, 25 ஆண்டுகள் இடைவெளியில் மீட்பு. இயேசுவின் சிலுவை, கொல்கொதாவில் அவரது இறப்பு, உயிர்ப்பு ஆகியவற்றின் நினைவாகக் கொண்டாடப்படும் யூபிலிகளும் உள்ளன. இந்தச் சமயங்களிலும் திருஅவை “ஆண்டவர் அருள் தரும் ஆண்டை அறிவித்து, அவருடைய அருளால் விசுவாசிகள் பலன்பெறச் செய்கிறது!

“யூபிலி“ என்ற சொல். “ஜோபெல்“ என்ற எபிரேய வார்த்தையால் குறித்துக் காட்டப்படுகிறது. இவ்வார்த்தை முதலில் ஆட்டுக்கடா வையும். பின் அறிவிப்பு செய்யப் பயன்படுத்திய அதன் கொம்பையும் குறித்தன(விப 19:13). பழங்கால இஸ்ரயேலில் ஒவ்வொரு 50- வது ஆண்டும் சிறப்பான ஆண்டாக அறிவிக்கப்பட்டது.

ஆட்டுக் கொம்பினாலான எக்காள முக்காளத்தோடு இந்த 50-ஆம் ஆண்டு ஆடம்பரமாகத் தொடங்கப்பட்டதால் இது “ஜோபெல் ஆண்டு“ என்று அழைக்கப்பட்டது. “ஜோபெல்“ என்ற எபிரேயச் சொல்லுக்கு “ஜூபிலுஸ் அல்லது ஜூபிலும்“ என்று இலத்தீன் சொல் பயன்படுத்தப்பட்டது. இதற்கு. “இடையர்களின் மகிழ்ச்சிக் குரல் என்பது பொருள். இவ்வாறு இடையர்களின் மகிழ்ச்சிக் குரல் இஸ்ரயேல் மக்கள் கொண்டாடிய ஜோபெல் ஆண்டுடன் இரண்டறக் கலந்து “யூபிலி ஆண்டு“ என்று வழக்கில் உள்ளது.

**யூபிலி ஆண்டின் நோக்கங்கள் நான்கு:**

**அடிமைகளுக்கு விடுதலை (லேவி 25:10):**

மனிதர்கள் கடவுளின் சாயலிலும், உருவிலும் படைக்கப்பட்டவர்கள் (தொநூ 1:27). எனவே, அவர்கள் கடவுளுக்கு மட்டுமே சொந்தம். வேறு எவருக்கும் அவர்கள் அடிமைகளாக முடியாது. ஆகவே அடிமைகளுக்கு விடுதலை அழுத்தம் பெற்றது.

**கடன்களுக்கு மன்னிப்பு (இச 15: 1-2):**

கடன்களை மன்னித்தல் மனிதரிடையே உறவைப் புதுப்பித்து புது வாழ்வைக் கொணர்கிறது. மகிழ்ச்சியைக் கொணரும் வாய்ப்பாக அமைகிறது. ஆகவே கடன்கள் மன்னிக்கப்பட்டன.

**சொத்துகள் மீட்பு (லேவி 25:13- 14,23):**

மண்ணுலகு இறைவனுக்குச் சொந்தம். மனிதர்கள் நிலத்தின் கண்காணிப்பாளர்களே. எனவே அவர்கள் தங்கள் சுயநலத்திற்காகத் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட படைப்புகளைப் பாழ்படுத்த உரிமை இல்லை என்பதை இவ்வம்சம் வலியுறுத்துகிறது.

**நிலத்திற்கு ஓய்வு (லேவி 25: 11-12):**

நிலத்திற்கு ஓய்வு வேண்டும் என்பது மனிதர்கள் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்பதை அறிவுறுத்துகிறது. இவ்வாறு யூபிலி ஆண்டு உலக வாழ்வில் மனிதர்கள் இழந்துபோன உரிமைகளைப் பெறுதலாகிய சமூக நீதியையும் சமத்துவத்தையும் அருள் வாழ்வில் இறைவனோடும் பிற மனிதரோடும் ஒப்புரவாகி மகிழ்வுடன் வாழும் புது வாழ்வின் பரிமாணங்களையும் வெளிப்படுத்துகின்றது.

உலக புதிய ஏற்பாட்டில் ”ஆண்டவர் அருள் தரும் ஆண்டை அறிவிக்க அவர் என்னை அனுப்பினார்” (லூக் 1:18-19) என்று இயேசு கூறுகின்றார். கிறிஸ்துவில் மலர்ந்த அருள் தரும் ஆண்டு அதாவது “யூபிலி ஆண்டு” மனமாற்றத்தை வலியுறுத்துகின்றது. மதிப்பீடுகளின்படி வாழ்வதை விடுத்து. மாற்று மனநிலை கொண்டிருத்தலையும் பகிர்வையும் பிறரோடு கொள்ளும் உறவில் நீதி. பொறுமை. அடக்கம் ஆகியவற்றையும் கொண்டு ஆவியில் நிறைந்த உரிமை மக்களாய் வாழ அழைப்பு விடுக்கின்றது.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

# யூபிலி ஆண்டில் எதிர்நோக்கின் திருப்பயணியாக நடைபோடுவோம்

இஸ்பெயின் நாட்டின் கொர்தோபா குருமட சமூகத்தின் ஏறக்குறைய 65 பிரதிநிதிகளை ஜனவரி 17, வெள்ளிக்கிழமை திருப்பீடத்தில் சந்தித்து அவர்களோடு உரையாடினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இந்த யூபிலி ஆண்டில் எதிர்நோக்கின் திருப்பயணியாக உரோம் நகர் வந்துள்ள இச்சமூகத்தின் பாதைகளைச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், முதலில் நாம் நம் திசையைக் குறித்து, அதாவது, இயேசுவை சந்தித்து உரையாடவிருக்கும் வானுலகம் குறித்து சிந்திக்க வேண்டும் என அழைப்புவிடுத்தார்.

முதலிடத்தையோ, துன்பமற்ற இடங்களையோ நாம் தேடி ஓடுபவர்களல்ல, ஏனெனில் அவை வெளியேற முடியாத முட்டுச்சந்துக்கள் என்ற திருத்தந்தை, அத்தகைய ஒரு சூழலில் நாம் சிரமத்துடனும் வெட்கத்துடனும் பின்னோக்கி வர தயாராக இருக்க வேண்டும் என்றார்.

இரண்டாவது அடையாளமாக, சாலையின் ஆபத்துக்களைச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை, எந்த ஒரு சூழலிலும் நம்பிக்கையின் துணையுடன் நாம் சான்றுகளாக விளங்க முடியும், ஏனெனில், இயேசு நம் துணையிருந்து நாம் நம்பிக்கையை விதைப்பவர்களாக செயற்படுவதற்கான பலத்தை வழங்குகிறார் என்றார்.

மூன்றாவது அடையாளமாக, நம்மை ஊக்கப்படுத்தும் பகுதிகள் பற்றிக் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உரோம் நகருக்கு அவர்களைக் கொணர்ந்துள்ள இந்த திருப் பயணம், புனித கதவு வழியாகச் செல்வதன் மூலமும், அப்போஸ்தலர்களின் கல்லறைகளை தரிசிப்பதன் வழியாகவும் ஊக்கத்தையும் புத்துணர்ச்சியையும் வழங்குகின்றது என்றார்.

நமது தலைவரும் ஆண்டவருமாக இருக்கும் இயேசு அவரின் வார்த்தைகள் வழியாகவும், திருநற்கருணை வழியாகவும் தன்னை நமக்கு வழங்குவதுடன், நாம் பாதையில் சோர்வுறும் போது நம் சோர்வை நீக்க உதவுகிறார் என்ற திருத்தந்தை, இத்தகைய நம்பிக் கைகளுடன் சிலுவையை அணைத்தவர்களாக முன்னோக்கி நடந்து செல்வோம் என கேட்டுக்கொண்டார்.

## ஒட்டகப்புலம் பங்குமக்களுக்கான கருத்தமர்வு

யூபிலி ஆண்டு சிறப்பு நிகழ்வாக யாழ். மறைமாவட்ட அகவொளி குடும்ப நல நிலையத்தால் முன்னெடுக்கப்பட்ட ஒட்டகப்புலம் பங்கு மக்களுக்கான கருத்தமர்வு கடந்த 07ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஒட்டகப்புலம் புனித அமல உற்பவ அன்னை ஆலயத்தில் நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை அருள்தாசன் அவர்களின் ஏற்பாட்டில் அகவொளி குடும்ப நல நிலைய இயக்குநர் அருட்தந்தை டேவிட் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் ‘நம்பிக்கையின் திருப்பயணிகள்’ என்னும் கருப்பொருளில் நடைபெற்ற இந்நிகழ்வில் கருத்துரைகள், நற்கருணை ஆராதனை என்பன இடம்பெற்றன.

அகவொளி குடும்பநல நிலைய இயக்குநர் அருட்தந்தை ஜெராட் அவர்கள் கலந்து நெறிப்படுத்திய இக்கருத்தமர்வில் 50ற்கும் அதிகமானவர்கள் பங்குபற்றி பயனடைந்தனர்.

## திருத்தந்தையின் ‘எதிர்நோக்கு“ என்ற சுயசரிதை நூல்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ‘எதிர்நோக்கு“ என்ற சுயசரிதை நூல் ஜனவரி 14, செவ்வாய்க்கிழமை முதல் 80 நாடுகளில் விற்பனைக்கு வந்துள்ளது.

திருத்தந்தை தன் கடந்தகால நினைவுகளைப் பகிர்ந்துள்ளார். பொன்மொழிகள், புகைப் படங்கள் போன்றவை தற்போது ஒரு தொகுப்பாக கிடைக்கும் வழி செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் Random House வெளியீட்டு நிறுவனமும், இங்கிலாந்தில் Viking வெளியீட்டு நிறுவனமும் இந்த நூலை ஆங்கிலத்தில் வெளிட்டுள்ளன. பொதுவாக ஒரு திருத்தந்தை இறைபதம் சேர்ந்தபின் வெளியிடப்படுகிற அவர் குறித்த நினைவலைகள், தற்போது யூபிலி ஆண்டையொட்டி அதன் பின்னணியில் வெளியிட முடிவு செய்ததாக Random House வெளியீட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

**‘நாடகக்கீர்த்தி விருது பெறும்...**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது பணியாற்றிவருவதுடன் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நாடகத்துறையில் ஈடுபாடு கொண்டு 40ற்கும் அதிகமான நாடகங்களை எழுதியும் 100ற்கும் அதிகமான நாடகங்களையும் நெறியாள்கை செய்ததும் ஏராளமான நாடகங்களில் முக்கியமான கதாபாத்திமேற்றும் நடித்துள்ளார்.

இவரால் எழுதப்பட்டு நெறியாள்கைசெய்யப்பட்ட கூத்துருவ நாடகங்களான ‘கொல்லீனும் கொற்றம்’ ‘அற்றைத் திங்கள்’ ‘செம்பாத்தாள்’ ஆகியவை திருமறைக்கலாமன்ற கலைஞர்களால் பல இடங்களிலும் மேடையேற்றப்பட்டு பலரது பாராட்டினையும் பெற்றுக்கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## யாழ். மறைமாவட்ட அகவொளி குடும்பநல நிலைய ஆலோசனைக்குழு கூட்டம்

யாழ். மறைமாவட்ட அகவொளி குடும்ப நல நிலையத்தின் 2025ஆம் ஆண்டுக்கான ஆலோசனைக்குழு கூட்டம் கடந்த 09ஆம் திகதி வியாழக்கிழமை அகவொளி குடும்பநல நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

குடும்பநல நிலைய இயக்குநர் அருட்தந்தை டேவிட் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இவ்வருடம் குடும்பங்களை மையப்படுத்தி முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இக்கூட்டத்தில் அகவொளி குடும்பநல நிலைய உதவி இயக்குநர் அருட்தந்தை ஜெராட், திருக்குடும்ப கன்னியர் சபை அருட்சகோதரி நெவிஸ் மற்றும் ஆலோசனைக்குழு அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர்.

**முதன்முறையாகத்...**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திய அருள்சகோதரி Brambilla அவர்கள், 2023ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் திகதியிலிருந்து அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு நிறுவனங்கள் மற்றும் அப்போஸ்தலிக்க வாழ்வு அமைப்புகளுக்கான திருப்பீடத்துறையின் செயலராகவும் பணியாற்றியுள்ளார்.

ஒரு திருப்பீடத்துறையின் செயலராக நியமிக்கப்பட்ட இரண்டாவது பெண்துறவியான இவர், திருஅவையில் ஒரு திருப்பீடத் துறையின் தலைவராக நியமிக்கப்படும் முதல் பெண்துறவியாவார். ஒரு செவிலியராகச் சேவையாற்றி அதன் பின் கொன்சலாத்தா துறவு சபையில் இணைந்து மொசாம்பிக் நாட்டிலும் மறைப்பணியாளராகச் சேவையாற்றியுள்ளார் திருப்பீடத்துறையின் புதிய தலைவர், அருள்சகோதரி Bra mbilla.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருஅவையின் இவ்வுலக தலைமைப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, 2013ஆம் ஆண்டிலிருந்து 2023ஆம் ஆண்டுவரையுள்ள காலஅளவில் திருஅவையின் திருப்பீடத்துறைகளில் பெண்களின் பங்கேற்பு 19.2 விழுக்காட்டிலிருந்து 23.4 விழுக்காடாக அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது

**மானிப்பாயில் ...**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வில் அருட்தந்தை மேரி பஸ்ரியன் அவர்களின் உருவச்சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி உரைகள் இடம்பெற்றதுடன் அருட்தந்தை மேரி பஸ்ரியன் நிதியத்தினரினால் வறிய மாணவர்களுக்காக மாதாந்தம் வழங்கப்படும் கல்வி கொடுப்பனவும் வழங்கிவைக்கப்பட்டது.

தொடர்ந்து அன்றைய நாளை சிறப்பித்து அருட்தந்தையின் நினைவாக ஆலய மண்டபத்தினுள் புதிதாக அமைக்கப்பட்ட நூல் நிலையமும் திறந்துவைக்கப்பட்டது.

# சிறுமை கண்டு நீங்க பொங்குவாய்

**ஒளிபடைத்த கண்ணினாய் வா.. வா.. வா**
**உறுதி கொண்ட நெஞ்சினாய் வா.. வா.. வா**
**தெளிவு பெற் மதியினாய் வா.. வா.. வா**
**சிறுமை கண்டு பொங்குவாய் வா.. வா.. வா**

என்பது மகா கவி பாரதியின் மனங்கொண்ட கவியாகும். தைத்திருநாள் பொங்கல் திருநாள். தமிழர் தம் வாழ்வியலின் பண்பாட்டுத் திருநாள். நன்றித் திருநாள். அறுவடைத் திருநாள். வீட்டு முற்றத்தில் கோலமிட்டுப் புதுப்பானையில் அரிசியிட்டு ஆகும்-கருமம் பலவும் கைகூடப் பொங்கி இறைவனுக்கும், இயற்கைக்கும் படைத்து உறவுகளுக்குக் கொடுத்தோ, கொடுக்காமலோ அயலவருடன் பகிர்ந்தோ பகிராமலோ நாம் வயிறார உண்டு மகிழ்ந்து பொங்கலோ பொங்கல் இனிதே நிறைவடைந்து விட்டது. இனி அடுத்த ஆண்டு தை?…

பானை பொங்கியது, பால் பொங்கியது, சாதம் பொங்கியது. எமது மனங்கள் பொங்கியதா? ஏன் மனங்கள் பொங்க வேண்டும்? இந்த வினாவுக்குப் பாரதி விடை தருகின்றான் அதுதான் “சிறுமை கண்டு பொங்குவாய்” என்பதாகும்.

பொங்கல் விழா பண்பாட்டு விழா என்று மதம் கடந்து அனைவரும் தமிழர் உணர்வுடன் கொண்டாடி மகிழ்கின்றோமெனில் புண்பட்டுக் கிடக்கும், புண்பட்டுப் போகும் தமிழர் தம் பண்பாட்டை எண்ணி எவராவது பொங்கினோமா? தமிழர் தம் தாயகத்தில் அரங்கேறும் வேண்டத்தகாத செயல்கள் மற்றும் அவலங்கள் கண்டு நாம் பொங்கினோமா? யுத்த சூழலில் படுகொலை செய்யப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டும், சிறையில் அடைக்கப்பட்டும் இன்னும் பல வடுக்களைத் தாங்கியும் வாடுவோருக்காக நீதியின் மேல் பசிதாகம் கொண்டு நீதிகேட்டு யாராவது பொங்கினோமா? அண்மை நாட்களாக ஒருவர் மீது ஒருவர் பழிதீர்க்கும் படலங்களும், வசைபா-டும் படலங்களும் படர்ந்து வருவதைக் கண்டு தட்டிக் கேட்டுப் பொங்கினோமா? பொங்கல் விழாவின் கருப்பொருளாக அரிசி, பால், சர்க்கரை, கஜு, பிளம்ஸ் என்பவற்றுடன் இவையும் கருப்பொருளாகக் கருத்தரிக்க வேண்டும்.

கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்னர் போர்ப் பலத்தில் பல இலட்சம் உயிர்கள் காவு கொள்ளப் பட்ட நிலைமாறி இன்று விபத்து மரணங்கள் எமது மண்ணில் மலிந்து வருகின்றது. அண்மைய நாட்களில் விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புகள் நாளொன்றுக்கு எட்டாக எகிறி வருவதைப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

இவ்வாறு உயிர்துறப்பவர்கள் இளை-ஞர்களாக இருப்பது ஜீரணிக்கமுடியாத மனவேதனை-யைத் தருகின்றது. கண்மூடித்தனமாக, மதுபோதை



**இ. இ. வசீகரன்**

யில் போட்டி மனப்பான்மையில், அலைபேசிப் பாவனையில், விதிமுறைகள் தெரியாமையில் என்னை வெல்ல யாருமில்லை என்ற மமதையில் இன்னும் பல கவனக்கலைப்பான்களில் வாகனங்களைச் செலுத்தி நாமும் சிதறி, பிறரையும் சிதற வைக்கின்றோம். இந்தத் துன்ப நிலை நீங்க மனித உயிர்களின் பெறுமதி ஓங்கப் பொங்குவோம்.

நமது இளைஞர் சமுதாயம் காட்டாற்று வெள்ளம் போல் செல்லும் திசை அறியாதும் புரியாதும் பயணித்துக் கொண்டிருக்கும் அபாய நிலை நமது எதிர்காலம் குறித்த பிரமிப்பை, ஏக்கத்தை, அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது. போதைப் பொருள் பாவனை, மதுபானப் பாவனை, நவீன தகவல் தொழில்நுட்ப இலத்திரனியல் ஊடகங்கள் எனப் பலவகைகளில் தம் வாழ்வைச் சிறைப்படுத்திக் கொண்டு விளக்கில் விழுந்த விட்டில்களாகத் நமது இளைய சமூகம் மாழப் போகின்றதா, அன்றி மறையப் போகின்றதா? என்ற விளிம்பில் வந்து நிற்கின்றோம். இவர்களைக் காக்க இத்தகு உயிர்கொல்லிகளை உருக்குலைத்தும் பொங்குவோம்.

விசிறிகளுக்கே வியர்க்கும் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மனிதப் பேரவலங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண ஒரு சிலர் முனைகின்றனர். முயற்சிக்கின்றனர். ஆனால் அவை வெறும் புலம்பல்களாக மாத்திரமே வெளிவருகின்றன. பாதை மாறும் பயணிகளுக்கு வாய்ப்பான வழிகாட்டிகள் கிடைக்காமை எம் தமிழினம் செய்த தவக்குறைவே ஆகும். திசைகாட்டிகளுடன் வழிகாட்டிகளும் வலம்வர பொங்குவோம்.

கிறிஸ்து இயேசு கூறியது போல புதிய திராட்சை இரசத்தைப் பழைய துருத்திகளில் ஊற்றினால் என்ன நிகழுமோ அதுதான் இன்று நிகழ்ந்து வருகின்றது. புதிய இரசத்திற்குப் புதிய துருத்திகள் தேவைப்படுவது போல இன்றைய இளையோருக்குரிய வளர்ப்பு முறைகள், அணுகுமுறைகள் கண்டு பிடிக்கப்பட்டால் காணாமல் போன மைந்தர்களும் தந்தையிடம் திரும்பி வருவார்கள் என்பது நிதர்சனமாகும். உளவியல், இறையியல், மானுடவியல், அறிவியல், கல்வியியல், சமூகவியல் போன்ற துறைகளிளல் துறைபோன வல்லுநர்கள் வாழாவிருக்காது கிறிஸ்து இயேசு கூறியது போல விளக்கை ஏற்றி மரக்காலுக்குள் மூடிவைக்காது தண்டின் மேல் ஏற்றி வைத்துப் பிறகும் பயனுற வாழ்தலும், மொழிதலும் செய்தலும் வேண்டும். இதற்குப் பயனுறு வாழ்வு வேண்டிப் பொங்குவோம்.

வயலில் நீ விதைத்து உன் உழைப்பின் முதற்பலன் கிட்டும் போது அறுவடை விழா“ வும் ஆண்டுத் தொடக்கத்தில் வயலிலிருந்து உனது உழைப்பின் பயனை ஒன்று சேர்க்கையில் “சேகரிப்பு விழா“ வும் எடுக்க வேண்டும். (விடுதலைப் பயணம் 23:16) என்ற இறைவாக்கிற்கு இணங்க நல்ல அறுவடைகள் செய்தோரும், நல்ல தாலந்துகளைச் சேகரித்தோரும் பொங்-கல் விழாவிற்குத் தகுதி பெற்றவர்கள் ஆகின்ற-னர். மாறாக சப்பைகளை அறுவடை செய்து பதர்களைச் சேகரிப்போர் பொங்கல் விழாவிற்குத் தகுதியற்றவர்கள் ஆகின்றனர். நாம் எத்தரப்பு சார்ந்துள்ளோம் என்பதைப் பொங்கி வழியும் பானைகள் முன் நின்று சிந்திப்போம்.

**எருசலேம் தேவாலயத்தில் - அன்று**
**கிறிஸ்து இயேசு**
**உலையில் பொங்கவில்லை**
**சிறுமைகள் நீங்க**
**உள்ளத்தில் பொங்கினார்**
**உன்னதம் பிறந்தது**
**இயேசுவின் வழியில் நாமும்**
**இயேசுவைப் போலல்லாது**
**இயேசுவாகவே.....**

---

# “ நல் உலகிற்கு எமது பிள்ளைகளை வழிநடத்துவோம்”

## யாழ் மறைமாவட்ட இயக்குநர் அருட்பணி எஸ். எயின்சிலி றொஷான் அடிகளாரின் செய்தி



2025 ஆம் ஆண்டை நாம் யூபிலி ஆண்டாக வரவேற்று மகிழ்கின்றோம். அவ்வேளை நாம் நடைமுறைப்படுத்தவுள்ள செயற்பாடுகள் மற்றும் திட்டங்களில் வருங்கால சந்ததியினராகிய சிறுவர் உலகு தொடர்பான எண்ணக்கருக்கள் மையங்கொள்ள வேண்டும். உலகத் திருஅவை யூபிலி ஆண்டில் நம்பிக்கையின் திருப் பணயிகளாக கூட்டொருங்கியக்கமாகப் பயணிக்க அயத்தமா-கும் இக்காலத்தில் சிறுவர்களும் அதே இலக்குடன் கரம் கோர்த்துப் பயணிக்க திருஅவை ஆவல் கொண்டுள்ளது.

திருப்பாலத்துவ சபை திருத்தந்தையின் நேசத்துக்குரிய சபையாகும். எனவே திருப்பாலர்கள் இயேசுவின் மழலைகளாக வாழ வேண்டும்.

தொழில்நுட்ப யுகத்தில் ஆன்மீக வாழ்வு தொலைந்து போகும் அபாய நிலையில் சிறுவர் உலகம் தத்தளிப்பது யாவரும் அறிந்த வலியான அதேவேளை வலிமையான உண்மை.

**திருப்பாலத்துவ சபை தினம்**
**09.02.2025**

இத்தகைய அபாயகரமான சூழலில் சிறுவர்களை ஆன்மீகப் பாதையிலும், அறிவியல் பாதையிலும் வலம்வரச் செய்யவேண்டிய அவசிய காலமிது.

எனவே தான் இவ் யூபிலி ஆண்டில் எம் திருப்பாலரை “நல் உலகிற்கு” எமது பிள்ளைகளை வழி நடத்துவோம் என்ற கருப்பொருளில் இவ்வாண்டு திருப்பாலர் சபை தினத்தைக் கொண்டாடுகின்றோம்.

அன்பார்ந்த பிள்ளைகளே! திருப்பாலர் சபையானது நாம் மறையை அறிந்து, மறையில் வாழ்ந்து, மறையைப் பரப்பும் முப்பரிமாண அழைப்பில் வாழ சந்தர்ப்பம் வழங்குகின்றது. இவ்வழைப்பில் நாம் நிலைத்து நின்று இயேசுவின் அன்புக் கதைகளை கற்றுணர்ந்து சிறுவருக்கு உதவிடும் சிறுவர்களாக வாழ்வதன் வழியாக இறைவனின் இறையரசுக்குள் நுழையும் வாய்ப்பைப் பெறுவோமாக.

பிள்ளைகளாகிய நீங்கள் இறைவனால் தரப்படுகின்ற செல்வங்கள் என்பதை நாம் அறிவோம். பிள்ளைகளை நாங்கள் இறைதிட்டத்திற்கு ஏற்ப வளர்ப்பது பெற்றோருடைய கடமையாகும். பிள்ளைகளை இறைவன் அன்பு செய்கின்றார். நாங்களும் அன்பு செய்கின்றோம்.

இந்த உலகில் எல்லோருமே பிள்ளைகளை அன்பு செய்கின்றோம். இருப்பினும் துரதிஸ்டவசமாக பிள்ளைகள் தீயவர்களாக மாறி-வருகின்றபோது அவர்களை உலகம் வெறுக்கின்றது.

எனவே “ நல் உலகிற்கு எமது பிள்ளைகளை வழிநடத்துவோம்” என்ற விருதுவாக்குடன் உங்கள் மத்தியில் உங்களுடன் வாழும் உங்களின் பெற்றோர், ஆசிரியர்கள், உங்களின் ஊக்குவிப்பாளர்கள், குருக்கள், துறவியர் காட்டும் வழியில் வாழ்ந்து, நாளுக்கு நாள் நீங்கள் நல்லொழுக்கத்திலும் ஞானத்திலும், அறிவிலும் வளர ஆசிக்கின்றேன்.

"சாட்பாட்" ஒரு மனிதனைப் போல் நடந்துகொண்டு, பாலியல் ரீதியான கற்பனையை வளர்த்து, அச்சுறுத்தும் வகையில் எதார்த்த அனுபவங்களைத் தன் மகனுக்கு வழங்கியது. உயிரை மாய்த்துக் கொள்வது தொடர்பான எண்ணங் களை அவன் அந்தச் சாட்பாட்டிடம் தெரிவிக்கவே, அது குறித்து அவ்வப் போது அவனை நினைவூட்டி வந்துள் ளது." - இதுவே தனது 14 வயது மகன் டெனெரிஸ் தர்காரியன் இறப்பிற்குக் காரணமென அமெரிக்காவின் /புளோ ரிடா மாநிலத்தைச் சேர்ந்த ஒரு தாய், சாட்பாட் (Chatbot) நிறு வனம் ஒன்றின் மீது வழக்குத் தொடுத்-துள்ளார்.

அமெரிக்கப் பத்திரிகையாளர் கெவின் ரூஸ்ஸின் (Kevin Roose) "எனக்கு நேர்ந்தது உங்களுக்கும் நேரலாம், எனவே எச்சரிக்கையாக இருங்கள்!" என ஏ.ஐ. சாட்பாட்கள் தன்னை எதிரியாகக் கருதுவதாகக் கவலை தெரிவித்து, நியூயார்க் டைம்ஸில் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். அதில் கடந்த ஆண்டு மைக்ரோ சொஃப்டின் "பிங்" தேடியந்திரத்தின் சாட்பாட் வசதி மூலம் உருவான சாட்பாட்டுடன் தான் உரையாடியதாக வும், உரையாடலில் அந்தச் சாட்பாட் அவரைக் காதலிப்பதாகவும், அதற்காக அவரது மனைவியை விட்டு விலகி வருமாறும் ஆலோசனை வழங்கி யுள்ளது.

இதனை அவர் ஊடகப் பொது வெளியில் பதிவிட்டதிலிருந்து அவரை வில்லனாக, நேர்மையற்றவராகப் பாவிக்க ஆரம்பித்துவிட்டன ஏ.ஐ. சாட்பாட்கள்.

## இயற்கையை மிஞ்சும் செயற்கை

"எல்லாச் செயற்கையான பொருட்களையும் உருவாக்கிய மூளை களுக்குச் சொந்தக்காரர்களாகிய மனிதர்கள். செயற்கையாக மூளை-களையும் உருவாக்க வேண்டும் என்றும் நினைத்தார்கள். அங்ஙனமே செய்மெய் (AI) பிறந்தது" (ஆழி செந்தில்நாதன்).எந்தவொரு புதிய அறிவி யல் கண்டுபிடிப்புகள் வந்தாலும், அது குறித்த சந்தேகங்க-ளும் கூடவே வரும். பல நேரங்களில் சந்தேகங்களைக் கிளப்பி விடுவர்கள் அறிவியல் துறையில் முற்றிலும் தொடர்பில்லாதவர்களாக அல்லது எதிர்க்க வேண்டும் என்கிற ஒரே நோக்கத்துடன் செயற்படக் கூடிய-வர்களாகவே இருப்பார்கள். ஆனால், ஏ.ஐ.-யைப் பொறுத்தவரையில் கண்டு பிடிப்பாளர்களுக்கே மிகுந்த சந்தேகமும் நிலைமை கைமீறிச் சென்று விடுமோ? என்கிற தொடர் அச்சமுமிருக்கிறது.

"கருவிதானே. எப்படிச் சுயமா-கச் சிந்திக்கும்?" என்ற கேள்வி எழுவது நியாயமே! மனித மூளையின் கட்-டமைப்பு மற்றும் செயற்பாடுகளுக்குக் காரணம் நியூரான்கள். அவ்விடத்தைச் செயற்கை நுண்ணறிவில் ப்ரோக்ராம் கள் பிடித்துக் கொண்டுள்ளன.

நூற்றுக்கும் குறைவான புரோகிராம்களும், அவைகளுக்கு இடையிலான தொடர்புகளும் நியூ ரான்களின் வேலையை மேற் கொள் கின்றன. இதுவே செயற்கை நியூரல் 6606060606O (Artificial Neural Network). நியூரான்கள் ஒவ்வொன்றும் மின் இரசாயன அதிர் வலைகளால் தூண்டப்பட்டு, மனித மூளையைச் செயற்பட வைக்கின்றன. ஜெனிடிக் அல்காரிதம் (Genetic Algorithm) முறைப்படி புரோகிராம் வினை யாற்றுகிறது. அதுவும் இயற்கை உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி முன்னெடுக்கும் தேர்வு (Selection), தக்கவைத்தல் (Crossover) மாற்றம் (Mutation) ஆகிய மூன்று வழி முறைகளையே தன்னுடைய செயற்பாட்டிற் குப் பயன்படுத்திக் கொள்கிறது.

## அச்சுறுத்தலாகப் பார்க்க வேண்டுமா?

உலகமெங்கும் ஒரு செயற்கை அறிவுப் பந்தயம் நிகழ்கிறது. அதீதமான செயற்கை அறிவு அம்சங்களை யார் முதலில் உருவாக்குவது? என்பதில் கடும் போட்டா போட்டி. இது நிறுவனங்கள் தாண்டி, நாடுகளுக்கு இடையிலான போட்டியாகவும் மாறிவிட்டது. இந் நிலையில் தான் "ஏன் செயற்கை நுண்ணறிவை நாம் அச்சுறுத்தலாகப் பார்க்க வேண்டும்?" என்கிற கேள்வி நியாயமானதாகிறது. அதற்குப் பல காரணங்களைக் குறிப்பிடலாம்.

தற்பொழுது ஏ.ஐ. ஜெனிடிக் புரோக் ராம்கள் தவறுகளைக் கண்டறிந்து, தானா-கவே திருத்திக் கொள்ளும் ஆற்றல் படைத்-திருக்கின்றன தேர்வு. தக்கவைத்தல் மற்றும் மாற்றம் ஆகியவைகளின் அடிப் படையில் சூழ்நிலைகளை அறிந்து கொண்டு, அதற்கு ஏற்ப தங்களைத் தாங்களே தகவலமைத்து வளர்த் துக் கொள்ள அவற்றால் முடிகிறது.

புரோக்ராம்கள் வழியாகப் புதிய விசயங்களைத் தொடர்ச்சி யாகக் கற்றுக்கொண்டேயிருப்பதால். நம்மைவிட பன்மடங்கு அதிக வேகத்தில் தானாகவே சிந்தித்துச் செயற்படுகிறது.

கார் உற்பத்தி, ஆலைத் தொழில், மருத்துவம் மற்றும் விவசாயத்துறைகளில் இதன் ஆதிக்கம் முன்னிலை வகித்தாலும், அடுத்த தொழில் புரட்சி உருவாக்கத்தில் செயற்கை நுண்ணறிவின் கையே ஓங்கி இருக்க வேண்டும் என்கிற நோக்கில் நாடுகள் செயற்படத் தொடங்கி விட்டதால் மனிதப் பாதுகாப்பிற்கே அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. ஒரு நாட்டின் பாதுகாப்பு அரணாக இருக்கும் இராணுவ வீரர்களை உருவாக்கும் முயற்சியிலும் செயற்கை நுண்ணறிவு களம் காண கிறது. அமெரிக் காவைச் சேர்ந்த போஸ்டன் டைனமிக்ஸ் நிறுவனம் "அட்லஸ்" என்கிற செயற்கை நுண்ணறிவு மனித இராணுவக் கருவியை உருவாக் கியுள்ளது.

ஆறடி உயரத்தில் ஆளை மிரட்டும் தோற்றத்திலிருக்கும் இது இயற்கைப் பேரிடர் மற்றும் அணு உலை ஆபத்து போன்ற பேரிடர் காலங்களில் மனித உயிர்களைக் காப்பாற்ற உருவாக்கப் பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், இதன் கரங்களில் எதிரிகளைச் சிதறடிக்கும் ஆயுதங்களைக் கொடுத்தால்? இந்தியாவில் ஏ.ஐ. தாக்கம் ஏ.ஐ. தொழில்நுட்பச் செயலாக்கத்தின் சர்வதேச சராசரி 26 விழுக்காடு. இதனை மிஞ்சும் விதமாய் இந்தியா 30% எட்டிப் பிடித் துள்ளது.

இருப்பினும், இந்தியாவில் 74% நிறுவனங்கள் ஏ.ஐ. பயன்பாட் டால் ஏற்படும் உறுதியான மதிப்பு மாற்றத்தை இன்னும் முழுமையாக உணர வில்லை. உலகளவில் 4% நிறு வனங்கள் தங்களின் செயற்பாடு களில் அதி நவீன ஏ.ஐ. திறன்களை மேம்படுத்தி, குறிப்பிடத் தக்க அளவில் தங்களது மதிப்பை அதிகரித்துக் கொண்டுள்ளன.

எப்பொழுதும் பயன்நிறை வளர்ச்சிகள் பாராட்டு தற்குரியவை. உதாரணத்திற்கு, அரியானா அரசி யல் அமைப்பு அருங்காட்சியகத்தில், சென்னை ஐ.ஐ.டி. தயாரித்த வழி காட்டி ரோபோ பார்வையாளர் களுக்கு உதவும் சேவையைத்




**"உலகமெங்கும் ஒரு செயற்கை அறிவுப் பந்தயம் நிகழ்கிறது. அதீதமான செயற்கை அறிவு அம்சங்களை யார் முதலில் உருவாக்குவது? என்பதில் கடும் போட்டா போட்டி. இது நிறுவனங்கள் தாண்டி, நாடுகளுக்கு இடையிலான போட்டியாகவும் மாறிவிட்டது. இந் நிலையில்தான் "ஏன் செயற்கை நுண்ணறிவை நாம் அச்சுறுத்தலாகப் பார்க்க வேண்டும்?" என்கிற கேள்வி நியாயமானதாகிறது."**

தொடங்கியுள்ளது. டெல்லி தேசிய நீதித்துறை அருங்காட்சிய கம் மற்றும் ஆவணக் காப்பகத்தில் ஏ.ஐ. மூலம் இயங்கும் வழக்கறிஞர் உள்ளார். நாடு முழுவதும் நீதிமன்றங்களில் 5.1 கோடி வழக்குகள் தேங்கியிருக்கின்றன. இதில் 1,80,000 வழக்குகள் 30 ஆண்டுகளைக் கடந்தவை. இந்நிலையில் வழக்குகளை விரைந்து முடிக்க இயந்திர நீதிபதி வரவு நன்றே என்கின்றனர். அதேவேளையில் இந்தியாவில் டிஜிட்டல் அரெஸ்ட்" அட்டூழியங் களும் புது வடிவங்களில் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. இது குறித்த விழிப்புணர்வும் அவசியம்.

தமிழ்நாட்டில் கல்வி, வேலைவாய்ப்பு, தொழில், ஆராய்ச்சி, மருத்துவத்துறைகளில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்து வதன் வாய்ப்புகள் குறித்த ஆக்கபூர்வ வழிகாட்டுதல்களையும், இப்புதிய தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை வழிநடத்தத் தேவைப் படும் வரையறைகளைத் தெளி வாக வகுக்கவும் 2024-25-ஆம் நிதியாண்டிற்கான பட்ஜெட்டில் பேசப்பட்டது. அதன்படி, சமீபத்தில் தமிழ்நாடு முதல்வர் தலைமை யில் "தமிழ்நாடு செயற்கை நுண் ணறிவு இயக்கம்" செயற்பாட்டுக்கு வந்துள்ளது. இவ்வியக்கத்தை அமுல்படுத்த முதல் கட்டமாக ரூ.13.93 கோடி நிதியும் ஒதுக்கப்பட் டுள்ளது.

உயர் வாழ்வை எல்லாரும் பெறுவதே சமூக முன்னேற்றம். இதனை அடைய "வாழ்தல்", "ஆள்தல்" எனும் இரு நிலை களுக்கிடையே நிகழும் நீண்ட போராட்ட இடைவெளி சுருங்க வேண்டும். வாழ்வதற்கான வளர்ச்சிகள் வரவேற்கத்தக்கவை. ஆள்வதற்கான அலட்சியங்கள் எதிர்க்க வேண்டியவையே!

# கிறிஸ்தவ ஆன்மீக விழாக் கொண்டாட்டங்கள் அனைத்தும் பிரதான முன்னுரிமை கொடுப்பது

# கிறிஸ்துவின் இறைமறை ஆன்மீகத்திற்கா? அல்லது உலகியல் போக பந்தங்களுக்கா?

ஆன்மீகம் என்ற சொல்லுக்கு சிறப்பான வரைவிலக்கணம் கொடுப்பதனால் ஆன்மாவை மேம்படுத்துவது ஆன்மீகம் ஆகும். அதாவது தனது ஆன்மாவைப் பற்றிய தெள்ளறிவைப் பெறும் ஓர் பயிற்சியோடு கூடிய முயற்சி என்றும் கூறலாம்.

மதம் எனும் ஏணி மூலம் உயர ஏறி தனது மெய்நிலையைப் பெறுவதே ஆன்மீகம். மேலும் கடவுள் (கட உள்) எல்லாம் கடந்தவனின் தத்துவத்தை அறிய முனையும்போது "நான்" யார்? எனக்கும் கடவுளுக்கும் உள்ள உறவோ தொடர்போ என்ன எனும் கேள்வியில் ஓர் ஆழ்ந்த தேடுதல் ஆன்மீகம் எனப்படும்.

நெறியில் (மதத்தில்) பிறந்து உலகிற்கு ஆன்மீக வழிகாட்டிகளாக விளங்கிய பக்திமான்கள், யோகிகள், மகாத்மாக்கள், ஞானியர், தெய்வீக புருஷர்கள் போன்றோரின் வாழ்க்கை சரிதங்கள், உபதேசங்கள், தத்துவங்கள் இவற்றின் அனுபவ வெளிப்பாடே ஆன்மீகமாகும்.

உதாரணமாக குறிப்பிடுகையில் இந்துக்களுக்கு பகவத்கீதை, புராணங்கள், உபநிடதங்கள்.

கிறிஸ்தவர்களுக்கு திருவிவிலியம், முகமதியர்களுக்கு குர்ஆன், பௌத்தர்களுக்குப் பாலி அல்லது பாளி. நாத்திகவாதியானாலும் சரி, ஆத்திகவாதியானாலும் சரி, எந்த (மதமாக) நெறியாக இருந்தாலும் சரி கர்ம யோகமே ஆன்மீகம்.

கர்மயோகம் என்பது கர்மம் + யோகம் எனும் சொற்களின் சேர்க்கையே. உடல், மனம், வாக்கினால் (சொல்லினால்) செய்யும் செயல்களே கர்மம் எனப்படும்.

யோகம் என்பதற்கு சாதனை என்று பொருள். ஒரு செயல் வெறும் ஏனோ தானோ என்று செய்யும் போது அச்செயல் மனதிலே விருப்பு வெறுப்புக்களை ஏற்படுத்தி துக்க துயரமாகப் பந்தப்படுத்தி மனதைப் பளு ஆக்குகின்றது.

அதே செயலைக் கர்ம யோக சாதனையாக நினைத்துச் செய்யும்போது மனதில் ஏற்படும் விருப்பு வெறுப்புக்களை நீக்கி மனதில் அமைதியை உருவாக்கி, சித்த சுத்தி (மனத் தூய்மை) அளிக்கிறது. வானவர்கீதத்தில் உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமையும் பூவுலகில் நன்மனத்தோருக்கு அமைதியும் உண்டாகுக.

எல்லோராலும் பேசப்பட்டு வாழப்படுகின்ற ஆன்மீகத்தினை நாம் இங்கு கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் சற்று உற்றுநோக்குவோமாயின் கிறிஸ்தவ பக்தி நிலையின் உத்வேகம் அல்லது அகத்தூண்டுதல் ஒருவனில் ஒருத்தியில் அல்லது ஒரு குழுமத்தில் உருவாகும்போது கிறிஸ்து இயேசுவின் ஆன்மீக - தார்மீக (தர்ம சிந்தனை) தெய்வீக உணர்வுகளை, சிந்தனைகளை, போதனைகளை வாழ்க்கை முறைகளை வாழ்வாக்கி வாழும் பொழுது மீண்டும் புனிதமாகி தூய தெய்வீக வாழ்வில் ஒன்றாய்க் கலந்திடும் ஓர் நிலையே ஆகும்.

(உதாரணம்: ஆதிக் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறைகள் அப்போஸ்தலர் பணி 2:42-47)

உலகியல் போக பந்தங்கள் என்பது உலகியல் சார்ந்த சிந்தனை, சொல், செயல்கள், உடலின் உணர்வுகள், உணர்ச்சிகள், இச்சைகள், பாவ மாய, மோக போக களியாட்டங்களோடு தொடர்புடையனவே உலகியல் போக பந்தங்கள் ஆகும். உதாரணமாக உலகிலே காணப்படும் இன்பங்கள் எல்லாம் நமக்காகவே நாம் அனுபவிப்பதற்காகவே இறைவன் படைத்தான் . நம்மிடம் கொடுத்தான். அனுபவி ராஜா என்று அனுப்பிவைத்தான் என்னும் ஓர் மன நிலை உடையோரும் இதையும் ஆன்மீகம் எனக் கூறுகின்றனர்.

பாலில் கலந்த தண்ணீர்போல ஆன்மீக வாழ்விலும், வழிபாடுகளிலும் உலகியல் போக பந்தங்கள் கலந்து கலப்படமாகி விட்டன. தேனை அதிகமாக உண்டு மயக்கமடைந்த வண்டுகள், குளவிகள், எறும்புகள் போல இன்றும் கிறிஸ்தவர்களாகிய எம்மில் பலர் அபினாக ஒப்பியமாக இருக்கின்ற போக பந்தங்களிலே அளவிற்கு மிஞ்சிய பற்றுக் கொண்டதனால் பந்தனம் (கட்டுக்களுள் ) அமிழ்ந்து மாயையின் உலகிலே வாழ்கின்றனர்.

வாழ்க்கை வேறு, வழிபாடு வேறு என்ற முரண்பட்ட கருத்துக்களில் வாழத் தொடங்கியதனால் வாழ்க்கைதான் வழிபாடு, வழிபாடு தான் வாழ்க்கை எனும் ஆன்மீக நெறிமாறி வாழ்க்கை தான் ஆடம்பரம் வழிபாடுதான் களியாட்டக் கேளிக்கைகள் என்றாகி விட்டது. கவிஞர் கண்ணதாசனின் ஓர் பாடலில் "ஆடையணி கலன் ஆடம்பரங்களை ஆண்டவன் விரும்புவது இல்லை. அங்கொரு கண்ணும் இங்கொரு கண்ணும் ஆலய வழிபாடில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய காலகட்டத்திலும் இறையியல் அறிவுரைகள், அறிவுகள் பரந்து விரிந்து காணப்பட்டாலும் இறை ஞானம் இன்னும் எம் மக்களிடையே மெய்ஞானம் பிறக்காத அஞ்ஞானமாகிக் கிடக்கின்றது. மக்களது ஆன்மாவை ஆன்மீகத் தேடுதலில் ஈடுபடாது உடல், உளம், சிந்தனை, செயல் போன்றவை தடை செய்யும் தடுப்புச் சுவர்களாக இருக்கின்றன.

நவீன விஞ்ஞான தொழில்நுட்பங்களால் உருவாக்கப்பட்ட உலக மயமாக்கல், பன்னாட்டு வியாபாரம், பல்துறை வளர்ச்சி போன்றவை காலப்போக்கில் ஆன்மீகத்தையும், அதன் வாழ்க்கை வழிமுறைகளையும் அதன் தனிச்சிறப்பையும் மழுங்கடித்து விட்டன. சிறந்த உதாரணமாக இருபெரும் நடைமுறை நிகழ்வுகளைக் குறிப்பிடலாம்.
ஒன்று: நுகர்வோர் கலாசாரம்
இரண்டு: ஆயுத, மாபியாக் கலாசாரம்

பற்பல வடிவங்களில், பற்பல முகங்களில் இந்த மாபியா ஊடகங்கள் தமது திறமைகளையும், யுக்திகளையும் பயன்படுத்தி பொருள்சார், நுகர்வோர் சார் ஆயுதங்கள் சார், போதைகள் சார், கலாசாரங்களை மக்கள் சிந்தனையிலும் உள்ளத்திலும் உட்புகுத்திப் பணமும், உடைமையும் தான் வாழ்விற்கு மிகப் பிரதானமானவை எனவே இவைகளுக்குத்தான் முன்னுரிமை கொடுத்து, வாழ்வை ஆடம்பரமாகக் களியாட்டமாக, இன்பமாக வளமாக்கி வாழ முடியும் என மக்களை நம்பவைத்து கலை, சலாசாரம், பண்பாட்டு பழக்க வழக்கங்கள், ஆன்மீக, தார்மீகப் பண்புகளைச் சீரகுலைத்துச் சிதறடித்து விட்டன.

கிறிஸ்தவ ஆன்மீக விழாக்களில் எல்லாம் இப்பொழுது வர்த்தக, வாணிப வியாபார நுகர்வோர் கலாசார விழாக்களாக மாற்றப்படுகின்றன. கிறிஸ்மஸ், பாஸ்கா ஆலய விழாக்கள் உதாரணமாக அமைகின்றன.

ஆடம்பரமான, களியாட்டமான பெருந்தீனி விருந்தாக, கேளிக்கைகளும் கூத்துக் கும்மாளங்களும் நிறைந்ததாக வெளிவேடமும், ஈகோவும் கொண்டதாகவும் தார்மீக ஆன்மீக அர்த்தங்களுக்கு முரணான ஊதாரித்தனமும், சுயநலப்போக்குகளும் கூடவே சண்டை, சச்சரவுகளும், போட்டி பொறாமைகளும், கருத்து மரணபாடுகளும் கொண்டதாகக் கொண்டாடப்படுகின்றன.

படிப்பது தேவாரம் இடிப்பது சிவன்கோயில் என்பது போலவும், படிப்பது பைபிள் (திருவிவிலியம்) அடிப்பது திருஅவையை என்பது போல் அல்லவா அமைகிறது எமது ஆன்மீகக் கொண்டாட்டங்கள்.

அன்பான கிறிஸ்தவர்களே! சகோதர சகோதரிகளே! கடவுளுடைய இரக்கத்தை முன்னிட்டு உங்களை வேண்டுகிறேன். கடவுளுக்கு உகந்த தூய, உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள். இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு. இந்த உலகத்தின் போக்குப்படி ஒழுகாதீர்கள். மாறாக உங்கள் உள்ளம் புதுப்பிக்கப்பெற்று மாற்றம் அடைவதாக! அப்போது கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்து தெளிவீர்கள். எது நல்லது, எது உகந்தது, எது நிறைவானது என்பதும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்.
(உரோமர் 12:1-2)

அருட்பணி வி.ஜி.குணம் (அ.ம.தி)
கொழும்பு மாகாணம்

## தை மகள் பிறந்தாள்..!

தை மகள் பிறந்தாள்
தரணி சிறக்க மலர்ந்தாள்!
சமத்துவச் சமநீதி சமூகத்தைச்
சனநாயகம் கண்டிடப் பிறந்தாள்!
இவள் தரும் பொங்கல்
கற்கண்டாய் இனிக்கட்டும்
எத்திசையும் மணக்கட்டும்!

இவள் பிறப்பால் விடியட்டும்
இனிய தமிழ் உலாவட்டும்!
சாதி சமயம் இனம் உடைக்கும்
சமத்துவப் பொங்கல் சாட்சியாய்ப்
பொங்கட்டும்! கரங்கள் இணையட்டும்
கவின்மிகு உலகு காணட்டும்!

இருப்பவன் இல்லான் என்னும்
உயர்வு தாழ்வு உடையட்டும் !
சம நீதிப் பொங்கல் பொங்கட்டும்
சந்தனமாய் கமழட்டும்!
வாழ்வும் வளமும் உரிமை
எண்ணும் எழுத்தும் உரிமை
உயிரும் உயர்வும் உரிமை
என்றே எங்கும் முழங்கும்
சனநாயகப் பொங்கல் பொங்கட்டும்!
தை...மகளே வா..
தரணி சிறக்க வா...!

- கவிஞர் எழில்மதி

## தமிழர் மத்தியில் கிறிஸ்தவத்தின் பணியைச் சர்வமதச் சூழலில் சிறப்பிக்க விளைகின்றேன்.

அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்

**ஒரே ஒளி முக்கோணக் கண்ணாடியினூடாக (Prism) பல்வேறு நிறங்களாகத் தோன்றுவதுபோல் ஒரே இறைவனிடமிருந்து பல பண்பாடு மதங்கள் மனித வாழ்விற்காக இயங்குகின்றன. இவைகளெல்லாம் அதே இறைவனில் முற்றுப்பெறும்**

## எல்லா மதங்களின் ஊற்றும், நோக்கமும், முடிவும் ஒன்றே

**அத்தியாயம் 2**

***இன்று இறை நம்பிக்கைக்கும் மத நோக்கத்திற்கும் எதிரான தவறுகள்***

**2.1 : இறை நம்பிக்கைக்கும், அதன் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட மதங்களுக்கும் எதிரானவை**

இன்று இறை நம்பிக்கையில் பல மதங்களைச் சேர்ந்த பக்தர்களாக வாழுகின்றவர்கள் இரு வித அபாயங்களை எதிர்கொள்ளுகின்றனர்.

1. நவீன விஞ்ஞான வளர்ச்சியின் கவர்ச்சியில் மனித நோக்கையும் எல்லைகளையும் உணராது, இறை நம்பிக்கையையும் மதத்தையும் புறக்கணிப்பது
2. மதங்களின் அடிப்படை நோக்கத்தைப் புரியாது, சில மத அனுசரணைகளையே இறுதி நோக்காக கொண்டு, மதத் தீவிரவாதிகளாக நடப்பவர்கள்.

இந்த ஆபத்துகளிலிருந்து பக்தர்களைக் காத்து விளக்கங்கள் கொடுத்துப் பாதுகாப்பது மதத் தலைவர்களின் கடமை.

**2.2 : உண்மையான விஞ்ஞான முன்னேற்றத்திற்கோ நவீனத்திற்கோ மதங்கள் எதிராக இல்லை!**

வாழும் மனிதர்கள் நிகழ் காலத்துக்குரியவர்கள். ஆரம்பத்திலிருந்தே மனிதன் தன் பகுத்தறிவினால் படைப்புகளின் காரண கர்த்தாவைத் தேடி, இறை உதவியுடன் மதங்களை ஆரம்பித்துப் பயன்பெற்று வாழ்ந்தார்கள். காலத்தினூடாக மனித தேடல்கள் பல்வேறு திசைகளில் தொடருகின் றன. ஆச்சரியமான வெற்றிகளினூடாக மனித வாழ்க்கைக்கு அழப்பெரிய சேவைகள் தொடருகின்றன. அதே நேரத்தில் தனது கண்டு பிடிப்புகளைத் தீய நோக்கத்திற்காக பயன்படுத்தும் அபாயமும் அதிகரிக்கின்றது.

இன்று நிகழ் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மதங்களைப் பயனுள்ளதாக நடத்துவது இன்றியமையாதது என மதத் தலைவர்கள் உறுதிகொள்ள வேண்டும். விஞ்ஞான வெற்றிகளிலும் நவீன வாழ்க்கையிலும் பெருமை கொள்ளும் மனிதர் சிலர் இறைவன் இருப்பையும் மதங்களின் தேவையையும் மறுதலிக்கின்றனர். இது தவறு! எங்கள் நூற்றாண்டுகளில் தோன்றிய மிகச் சிறந்த விஞ்ஞானி அல்பேட் ஐன்ஸ்ரைன் (Albert Einstein) இறைவனைப் பற்றிய தமது அறிவை இவ்வாறு வெளிப்படுத்துகிறார்.எனது மதம், மனிதத்திற்கு எல்லாவிதத்திலும் எல்லையற்ற அப்பாலான சக்தியை மிகத் தாழ்மையான வியப்பும் அதிர்ச்சியுடனும் ஏற்றுகொள்வது. இச் சக்தி எமது பலவீனமான புத்திக்கு விளங்கக் கூடிய விதத்தில் சகல மிகச் சிறிய விபரங்களிலும் தம்மை வெளிப்படுத்துகின்றது. இந்த விளங்க முடியாத சிருட்டிப்பின் பின்னால், மனிதப் பகுத்தறிவுக்கு மேலான சக்தி ஒன்றிருக்கின்றது என்பதை மன எழுச்சியுடன் ஏற்றுகொள்வதே இறைவனைப் பற்றிய எனது சிந்தனை.

(தொடரும்..)

# அன்பின் மகிழ்வு



24

### குடும்பத்தில் உள்ள உடல் உழைப்பு

திருபாடல்128 இல் தந்தை ஒரு குடும்பத்தினுடைய ஓர் உழைப்பாளியாக சங்கீத ஆசிரியர் சித்தரிக்கின்றார். ஒரு குடும்பத்தில் தந்தை தன்னுடைய உடல் உழைப்பின் மூலம் தன்னுடைய குடும்பத்தின் நலனைப் பேணிப் பாதுகாக்கின்றார். "உமது உழைப்பின் பலனை நீர் உண்பீர்! நீர் நற்பேறும் நலனும் பெறுவீர்!" (தி.பா 128:2). குடும்பத்திற்கு மனித உழைப்பு என்பது மானிட மாண்பின் இன்றியமையாத ஒரு பகுதி என்பதைப் படைப்பின் தொடக்கத்திலேயே இறைவன் மிகவும் தெளிவானவார்த்தைகளில் கூறுகின்றார். "ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டு வந்து குடியிருக்கச் செய்தார்" (தொ.நூ 2:15). எனவே இறைவனால் கொடுக்கப்பட்ட திறமைகளையும் கொடைகளையும் பயன்படுத்தி வருந்தி உழைத்து குடும்பத்தை வளர்க்கும் கடமையை விவிலியம் வலியுறுத்துகின்றது.

எனவே முதலில் மனித உழைப்பானது குடும்பத்தினுடைய வாழ்வாதாரம், நிலைத்தன்மை, வளர்ச்சி என்பவற்றிற்கு மிக முக்கியமான அடிநாதமாக விளங்குகின்றது. ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள தந்தையர்கள் தங்கள் கடின உழைப்பின் மூலம் குடும்பத்தைக் காத்து வருகிறார்கள். எனவே இந்தப் புதிய ஆண்டில் எம் குடும்பத் தலைவர்களுக்காக, அவர்களின் கடின உழைப்புக்காக அவர்கள் செய்யும் தொழிலுக்காகவும் நன்றி கூறி இறைவன் எம் குடும்பங்களுக்கு நல்ல தொழில் வாய்ப்புக்களை தர வேண்டும் என்று மன்றாடுவோம்.

குடும்பத்தில் தந்தை வெளியே சென்று உழைத்து குடும்பத்தை பார்க்கின்ற அதேவேளை தாய்மார்கள் அன்றாடம் அதிகமாகச் செய்கின்ற மிகப் பெரும் வீட்டுப்பணிகளை நாங்கள் பாராட்ட வேண்டும். காலையில் இருந்து மாலைவரை வீட்டில் இருந்து கொண்டு பெரும் பணிகளை ஒரு தாய் செய்து வருகிறார். புதிய ஆண்டில் எம் தாய்மாருக்காகவும் மன்றாடுவோம். அவர்கள் செய்யும் பெரும் தியாகம் நிறைந்த பணிகளை நன்றியோடு நினைவு கூருவோம்.

உழைப்பு மிகவும் முக்கியமானது என்பதை புனித பவுல்தன்எழுத்துக்களில்மிகவும்சிறப்பாககுறிப்பிடுகின்றார். குறிப்பாக "உழைக்க மனமில்லாத எவனும் உண்ணலாகாது" (2தெச3:10) என்று பவுல் வற்புறுத்துகின்றார். எனவே தான் பவுல் தன் சொந்தக் கையால் உழைத்து, தன் சொந்த வாழ்வாதாரத்தை உறுதி செய்து நற்செய்திப் பணியைச் செய்தார்.

எனவே குடும்ப வாழ்வுக்குக் குடும்பத் தலைவன் ஓர் கடும் பொறுப்புள்ள உழைப்பாளியாக இருக்க வேண்டும். இன்று பல குடும்பங்களில் பல பிரச்சினைகள் உருவாகுவதற்குக் காரணம் குடும்பத் தலைவர்கள் பொறுப்பற்றவர்களாக உழைத்துக் குடும்பத்தைக் காப்பாற்றக் கடும் உழைப்பை கொடுக்க மனம் அற்றவர்களாக வாழ்கின்ற நிலையும் ஒரு காரணமாகும்.

மனித உழைப்பு என்பது ஓர் அன்பின் உழைப்பாகும். இதன் மூலமாகக் குடும்பத்தில் உள்ள பெற்றோர் தங்கள் கடின உழைப்பின் ஊடாக பிள்ளைகள் மகிழ்வுடனும் அமைதியுடனும் வாழக்கூடிய ஓர் சூழ்நிலையை குடும்பத்தில் அமைக்கிறார்கள் என்று புனித அன்னை திரேசாள் குறிப்பிடுகின்றார்.

மேலும் மனித உழைப்பின் பெறுமதியை பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுப்பதும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு விட்டுச் செல்லும் ஓர் பாரம்பரியமாகும். பெற்றோரின் கடின உழைப்பைப் பார்த்தே பிள்ளைகளும் கடினமாக உழைக்க வேண்டும் எனக் கற்றுக்கொள்கிறார்கள்.

**அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்**
**அகவொளி குடும்ப நல மையம்**

மனித உழைப்புக்கு திருக்குடும்பம் ஓர் மிகப் பெரும் முன்னுதாரணமாகும். புனித சூசையப்பர் மிகவும் தாழ்ச்சியுடனும் கடினமாகவும் உழைத்து தன் திருக்குடும்பத்தைக் காத்து வழிநடத்தினார். அவரின் முன்மாதிரிகையான வாழ்வு சாதாரண மனித உழைப்பானது அன்புடம் நம்பிக்கையுடனும் இடம் பெறும் போது அது ஓர் குடும்பத்துக்கான ஓர் பெரும் புனித பணியாக மாறுகின்றது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

புனித சின்னத் திரேசாளின் பெற்றோர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் புனிதர்களாக ஐப்பசி மாதம் 18 2015 ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டார்கள். இவர்களே கணவன் மனைவியாக புனிதர் நிலைக்கு திருஅவையில் முதல் முதலாக உயர்த்தப்பட்டவர்களாவர். குறிப்பாக இவர்கள் தங்கள் கடின உழைப்பால் தங்கள் குடும்பத்தை தாங்கியவர்களாவர். தந்தை லூயில் கடிகாரம் மற்றும் நகை செய்பவராவார். தன் தொழிலில் நேர்மையும் கடின உழைப்பும் கொண்டு வாழ்ந்தார்.

அதேபோல இவரின் மனைவி செலியும் ஓர் கடின உழைப்பாளி. இவர்கள் இருவரும் ஓர் குழுவாக இணைந்து குடும்பத்துக்காக தியாகத்துடன் உழைத்தார்கள். செலி லேஸ் பின்னுபவராகத் தொழில் செய்து, தன் உழைப்பினால் தன் குடும்பத்தை கணவனோடு சேர்ந்து காத்து வந்தார்.

சிறப்பாக இவர் தனக்கென ஒரு தொழிலை வைத்து உழைத்தாலும் தன் குடும்பப் பொறுப்புகளுக்கு முன்னுரிமை கொடுத்துப் பணி செய்தார். செலி ஓர் பணக்காரக் குடும்பமாக மாற வேண்டும் என்பதற்காக உழைக்காமல் தன் குடும்பத்தை அன்புள்ள குடும்பமாக ஆக்கவேண்டும் என்பதற்காக உழைத்து வந்தார்.

தனது திறமைகளைப் பயன்படுத்தி கடவுளின் புகழ்ச்சிக்காக உழைத்து, தன் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். தான் செய்த தொழில் தான் தாய் என்கின்ற ஸ்தானத்தில் வரும் கடமைகளைப் பாதிக்காத வகையில் தன் உடல் உழைப்பை குடும்பத்தில் வழங்கி வந்தார்.

எனவே இவர்கள் எவ்வாறு குடும்பத்திலே கணவனும் மனைவியும் கடின உழைப்பின் ஊடாக தங்களுடைய பிள்ளைகளே தங்கள் வாழ்வின் மகிழ்ச்சி என்கின்ற உணர்வோடு கடினமாக உழைத்துப் பிள்ளைகளை உருவாக்குகின்ற பணியைச் செய்ததுபோல், இந்தப் புதிய ஆண்டில் நாங்களும் எங்கள் பிள்ளைகளுக்காக தியாகங்களைச் செய்து எங்களுடைய குடும்பங்களில் உள்ள பிள்ளைகளுக்கான எதிர்காலத்தை அமைக்க இறை ஆசீர் வேண்டுவோம்.

# யூபிலி ஆண்டில் இளையோரிடமிருந்து திருஅவை வேண்டிநிற்பது

எதிர்நோக்கின் அடையாளங்கள் அதை தங்களில் முதன்மைப்படுத்தும் இளையோர்க்கு தேவை. தற்போது இளையோர் தங்களது கனவுகள் நொறுக்கப்பட்டது போன்று காண்கின்றார்கள். அவர்களது எதிர்காலம் ஏமாற்றம் அடையவிடக் கூடாது. இளையோரது உற்சாகத்தில் எதிர்காலம் நிறுவப்பட்டுள்ளது.

குறிப்பாக பேரழிவுகள் மற்றும் சமூகத்துயரங்கள் ஏற்படும் போது தங்களது சட்டையின் கைப் பகுதியை மடக்கிக்கொண்டு பிறருக்கு உதவும் போது அவர்களது உற்சாகமும் ஆற்றலும் ஏராளமாக வெளிப்படுகின்றது. இதை நாம் காணும் போது நமக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது.

ஆனால் அத்தகைய இளையோர் பலர் இன்று நம்பிக்கையின்றியும் எதிர்நோக்கின்றியும், அதனை இழந்து, வாழும் நிலையில் இருப்பதை நாம் காண்கின்றோம். இதைக் காணும்போது நமக்கு வருத்தமளிக்கின்றது. எதிர்காலம் நிச்சயமற்ற ஒன்றாக இருக்கும்போது, கனவுகள் நனவாகாமல் இருக்கும்போது, வேலையோ, பொறுப்போ, படிப்போ நிச்சயமற்ற நிலையில் இருக்கும்போது, நமது விருப்பங்களை நிறைவேற்ற முடியாத நிலையில் வருந்தும்போது, நிகழ்காலத்தை மனச்சோர்விலும் சலிப்பிலும் வாழ்வது தவிர்க்க முடியாததாகிறது.

போதைப்பொருட்களின் மாயை, ஆபத்து, நிலையற்றவற்றைப் பின்தொடர்வது போன்றவை மற்றவர்களை விட அவர்களிடம் குழப்பத்தை உருவாக்கி, வாழ்க்கையின் அழகையும் அர்த்தத்தையும் மறைத்துவிடுகின்றது. அவர்களை இருண்ட படுகுழிகளில் நழுவச் செய்து, சுய அழிவுச் செயல்களைச் செய்யத் தள்ளுகிறது.

இத்தகைய நிலையில் திரு அவையின் யூபிலி அவர்களுக்கு உந்துதல் அளித்து நல்வாழ்விற்கு அழைக்கும் ஒரு வாய்ப்பாக இருக்கின்றது. புதுப்பிக்கப்பட்ட ஆர்வத்துடன் குழந்தைகள், மாணவர்கள், திருமண ஒப்பந்தம் செய்யப்பட்ட தம்பதிகள், இளைய தலைமுறையினரைகவனித்துக்கொள்வோம்! இளைஞர்களுடனான அருகிருப்பும், மகிழ்ச்சியும் திருஅவை மற்றும் உலகின் எதிர்நோக்காக இருக்கின்றது.

# அகவொளி குடும்ப நலமையம்
## திருமண சேவை





## மணமகன் தேவை

வயது :- 27
சமயம் :- றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை- A/L Diploma in Home Science
தொழில் ::- தையல், ஐசிங்
பிரதேச செயலகம் :- மன்னார்

வயது - 35
சமயம் :- றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை- B.S.C. Computer Science
தொழில் :- Softwear Engineering
பிரதேச செயலகம் :- நல்லூர்

## மணமகள் தேவை

வயது - 35
சமயம் :- றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை :- A/L
தொழில் :- France
பிரதேச செயலகம் :- மன்னார்

வயது - 34
சமயம் :- றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - A/L
தொழில் :- France
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 34
சமயம் :- றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - A/L
தொழில் :- சந்தைப்படுத்தல்
பிரதேச செயலகம்:- மருதங்கேணி

வயது - 31
சமயம் :- றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - IBSL
தொழில் :- NDB Bank உதவி முகாமையாளர்
பிரதேச செயலகம் :- மட்டக்களப்பு

வயது - 39
சமயம் :- றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - A/L
தொழில் :- Privite Company
லண்டன்

வயது - 45
சமயம் :- றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - O/L
தொழில் :- தபால் ஊழியர்
பிரதேச செயலகம் :- சண்டிலிப்பாய்

வயது - 37
சமயம் :- றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - A/L
தொழில் :- கட்டார்
பிரதேச செயலகம் :- செம்பியன்பற்று

வயது - 30
சமயம் :- றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - B.Sc (Horns)
தொழில் :- Civil Engineering
பிரதேச செயலகம் :- செம்பியன்பற்று

வயது - 35
சமயம் :- றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - A/L
தொழில் :- Marketing Officer
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

**இவை பற்றிய மேலதிக விபரங்களைப் பெற கீழ் உள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்**
**அகவொளி குடும்ப நல மையம் புனித பத்திரீசியார் வீதி யாழ்ப்பாணம்**
**தொலைபேசி இலக்கங்கள்**
**077 - 904 7651, 021- 222 2856, 077- 942 2970.**

(சுஜா, யாழ்ப்பாணம்)

**கேள்வி: "கிளின் சிறிலங்கா" திட்டம் பற்றிய உங்கள் கருத்து?**




ப: சுஜா, 'கிளின் சிறிலங்கா' அவசியமான, தேவையான ஒரு திட்டம் தான். எல்லா மட்டங்களிலும் துறைகளிலும் இது செய்யப்பட வேண்டும். விபத்துக்களை ஏற்படுத்தக் காரணமாயிருக்கும் அனைத்தையும் வாகனங்களில் குறிப்பாக பஸ்களிலும் ஓட்டோக்களிலும் இருந்து கழற்றி எடுப்பதுபோல ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பது. அலுவலகங்களில் இருக்கிற உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளைச் சரியாகச் செய்வது, சேவை நாடி வருகிற பொதுமக்களின் தேவைகளை இழுத்தடிக்காமல் நிறைவேற்றுவது எனப் பல விடயங்களையும் 'கிளின்'பண்ண வேண்டிய பெருந் தேவை நாட்டில் இருக்கிறது.

(விஜி, யாழ்ப்பாணம்)

**கேள்வி: சில நல்ல, பெரிய மனிதர்கள் என்று சமூதாயத்தினால் கருதப்படுகின்றவர்ளும் சமத்துவத்தை பேணு பவர்கள் போல காட்டிக்கொண்டாலும், சாதி பார்ப்பதில் அவர்கள் குறியாய் இருக்கின்றார்கள் என்பதை எண்ணிப் பார்க்கின்ற போது மனம் துன்ப மடைகின்றது? இதற்கு என்ன காரணம்?**

ப: விஜி, உங்கள் கேள்வியைப் படித்தபோது, "எல்லாச் 'சாதி மயிரையும்' கூட்டிச் பெருக்கி ஓரமாகத் தள்ளினார் 'சலூன்' கடைக்காரன்" என எங்கோ படித்த ஒருவரின் வார்த்தைகள்தான் என் நினைவுக்கு வருகிறது. 'வானம் இருக்கும்வரை மழை போகாது மண்டை இருக்கும்வரை சளிபோகாது!' என்று முன்னோர்கள் கூறுயிருப்பதைக் கேட்டிருப்பீர்கள். அதுபோல தமிழ் மண்டை இருக்கும் வரை சாதிச்சளியை முற்றாகக் களைவது கடினம்!

# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா,அமதி**

(றொஷான், ஆனைக்கோட்டை)

**கேள்வி: மன்னாரில் ஒரு மாட்டுவண்டிச் சவாரியில் இடம்பெற்ற தகராறு இரட்டைக் கொலையில் தொடங்கி பின்னர் இரண்டு சூட்டுச் சம்பவங்களில் நான்கு பேர் கொல்லப்பட்டும் இரண்டு பேர் படுகாயமடைந்தும் உள்ளனர். இந்தச் சம்பவங்கள் இரு கத்தோலிக்க கிராமங்களுக்கிடையில் இடம்பெறுவதாகத் தெரிகிறது. இது பெரும் வேதனை அளிக்கும் துன்பமாகத் தொடர்கிறது. இந்நிலையைத் திருஅவை சரிசெய்ய முன்வரவேண்டும் அல்லவா?**

ப: றொஷான், இணக்கப்பாடு எட்டப்படுவதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்படியிருந்தும் பழிதீர்க்கும் படலம் தொடர்வது மிகவும் வேதனைக்குரிய விடயம். இவ்வாறான சம்பவங்கள் இன்னும் இன்னும் வன்மத்தையும் வைராக்கியத்தையும் உண்டுபண்ணியே தீரும். இதனால் யாரும் எதையும் பெறப்போவதில்லை. இதனை உணர்த்தி, இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இருபகுதியினரையும் சமரசத்துக்குக் கொண்டுவருவது மிக அவசியமானது. இல்லையென்றால் இது தீராப் பகையாகவே காலாகாலத் திற்குத் தொடரும்.

(அன்றன், யாழ்ப்பாணம்)

**கேள்வி: கேள்விகளைக் கேட்டால் கதைகளால் பதில் சொல்கின்றீர்கள்! ஏன்?**

ப: அன்றன், ஒத்தமை நற்செய்தி நூல்களாகிய மாற்கு மத்தேயு லூக்கா ஆகியவற்றில் இயேசுவிடத்தில் கேட்கப்படுகிற கேள்விகளுக்கு கதைகள் மூலமாகத்தான் பதில்களைப் பகிர்ந்து கொள்கிறார். அதே முறையைத்தான் நானும் கொஞ்சம் பிற்பற்றுகின்றேன். ஏன் பிடிக்கவில்லையா?

(சாந்தன், கிளிநொச்சி)

**கேள்வி: சிலவேளைகளில் சிலருக்கு இரண்டு வெவ்வேறு விடயங்கள் ஒன்றுபோல தெரிகின்றதே! என்ன காரணமாக இருக்க வேண்டும்?**

ப: 'கற்றாக்ரா' இருக்கவேண்டும் சாந்தன். நல்ல கண்வைத்தியரிடம் காட்டவேண்டும்! விழித்திரையில் படர்ந்திருக்கும் தோலை நீக்கிவிட இரண்டு விடயங்கள் இரண்டாகத் தெரியும் ஒரு விடயம் ஒன்றாகத் தெரியும்!

(றமேஸ், யாழ்ப்பாணம்)

**கேள்வி: குடிகாரன் பேச்சு விடிஞ்சாப் போச்சு என்று ஏன் சொல்லுகின்றார்கள்?**

ப: காலையில் கண்விழித்த கணவன், தன் தலைவலிக்கும் மனைவி வீட்டை விட்டுச் சென்றதற்கும் காரணம், தான் மிக அதிகமாகக் குடித்ததுதான் என்பதை மனவேதனையுடன் உணர்ந்து கொண்டான். அதற்குக் காரணமான மதுப் போத்தல்களை எல்லாம் உடைக்கத் தீர்மானித்தான். ஒவ்வொரு போத்தலாக உடைக்கத் தொடங்கி ஐந்து போத்தல்களை ஆவேசத்தோடு உடைத்திருப்பான். ஆறாவது போத்தலை உடைக்க எடுத்தபோது அது கொஞ்சம் பாரமாக இருந்தது. அவதானித்துப் பார்த்தபோது அது குடிக்காமல் விடப்பட்ட மதுப்போத்தல் என்பதைக் கண்டுகொண்டான். ஒரு கணம் யோசித்தான். பின்னர் போத்தலைப் பார்த்து, "நேற்று நடந்த சண்டைக்கும் இன்றைய என் தலைவலிக்கும், உனக்கும் இடையில் எந்த சம்பந்தமும் இல்லை! ஆகவே நீ வேறாக இரு!" என்று அதனைக் கவனமாக எடுத்து வைத்தான். றமேஸ், இப்பேர்ப்பட்ட பேச்சுக்களைத்தான் அதாவது 'நம்ம கதயத்தான்', 'குடிகாரன் பேச்சு விடிஞ்சாப் போச்சு' என்று சொல்லுகிறார்கள்.

## குருநகர் பங்கு பக்திச்சபை அங்கத்தவர்களுக்கான கருத்தமர்வு

யூபிலி ஆண்டு சிறப்பு நிகழ்வாக குருநகர் பங்கில் முன்னெடுக்கப்பட்ட பங்கு பக்திச்சபை அங்கத்தவர்களுக்கான கருத்தமர்வு கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை யாவிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் அருட்சகோதரர் றொகான் அவர்களின் உதவியுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் குழுச்செயற்பாடுகள், கலந்துரையாடல்கள் என்பன இடம்பெற்றதுடன் அமலமரித்தியாகிகள் சபை அருட்தந்தை ஸ்ரனி அன்ரனி அவர்களால் யூபிலி ஆண்டு தொடர்பான கருத்துரையையும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பங்கின் பக்திச்சபைகளை சேர்ந்த 60 அங்கத்தவர்கள் பங்குபற்றி பயனடைந்தனர்.


## வாழ்த்துகின்றேன்



கன்னியர் செபமானலக்கன்னியர்
சபையை சார்ந்த
அன்ரனிப் பீரில் மரிய சுதர்சனா
07.01.2024 அன்று
தனது நிரந்தர அர்ப்பணத்தை
மன்னார் பட்டிதோட்டம்
செபமாலைக் கன்னியர் சபை
ஆச்சிரமத்தில் மன்னார்
மறைமாவட்ட ஆயர்
பேரருட்கலாநிதி இம்மானுவேல்
பெர்னாண்டோ ஆண்டகை
முன்னிலையில் பெற்றுக் கொண்டார்.
மன்னார் மறைமாவட்டம் இலுப்பைக்குளம் புனித அடைக்கல
அன்னை ஆலயமப் பங்கைச் சேர்ந்த அமரர் யக்கரியாஸ்
அன்ரணிப்பீரிஸ் அடைக்கலம் தம்பதியினரின் கனிஷ்ட புதல்வி
ஆவார். செபமாலைக் கன்னியர் சபையில் இணைந்து
20.01.2014 அன்று முதலாவது அரம்பணத்தைப் பெற்றுக் கொண்டார்

அருட்சகோதரியின் பணிவாழ்வு சிறக்க
இறைவனின் நிறைவான ஆசீரையும், மருதமடு
அன்னையின் அருளையும் வேண்டி அவரை வாழ்த்தி மகிழ்கின்றோம்

ய. தேவதாஸ்
திருவுளப் பணியாளர் சபை நிரந்தர உறுப்பினர்
யாழ்ப்பாணம்


## தீவக மறைக்கோட்ட குருக்களுக்கான மாதாந்த தியானம்

14.01.2025 அன்று அல்லைப்பிட்டி பிலிப்புநேரியார் ஆலயத்தில் அருட்பணி யோ.எமில் ஜெயசீலன் அடிகளார் அவர்களால் ஆன்மீகமும் குருத்துவ நிர்வாகமும் என்னும் தலைப்பில் குருக்களுக்கான மாதாந்த தியானம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் தீவக மறைக்கோட்டத்தில் உள்ள அனைத்து குருக்களும் பங்குபற்றிப் பயன்பெற்றனர். ஆன்மீகத்தில் செபம், தியாகம், அன்பு என்ற தலைப்பில் றோயல் புளு என்ற பிரெஞ்சு ஆசிரியரின் கருத்துக்கள் பகிரப்பட்டது. இரண்டாம் பகுதியில் றொபின் சர்மாவினுடைய தலைமைத்துவப் பண்புகள் என்ற அவருடைய எட்டுப் படிகளை குருத்துவப் பணிக்கு அமைய ஜெயசீலன் அடிகளாரால் விளக்கமளிக்கப்பட்டது.

இத்தியானம் குருக்களுக்கு பயன் அளிப்பதாக அமைந்தது. அருட்பணி ஜிம்புறவுண் அடிகளாரது மறைவு இன்னமும் சர்வதேசத்தினால் கண்டுகொள்ளப்படாமை பற்றி பிலிப்பிலோ சுசான் அவரது கண்டனம் பற்றியும் நினைவூட்டப்பட்டது. இறுதியாக நற்கருணை ஆசீரும் இடம்பெற்றது.

## மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், அத்தியாவசிய பொருட்கள் வழங்கும் நிகழ்வு

மாணவர்களுக்கான ஒருதொகுதி கற்றல் உபகரணங்களும் அத்தியாவசிய பொருட்களும் வழங்கும் நிகழ்வு கனடா திருமறைக் கலாமன்றத்தின் அனுசரணையில் யாழ். திருமறைக்கலாமன்றத்தினூடாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை, மன்னார், உருத்திரபுரம், மாங்குளம், மட்டக்களப்பு சிறுவர் இல்லங்கள், கிளிநொச்சி மற்றும் வவுனியா பிரதேசங்களை சேர்ந்த மாணவர்கள் மற்றும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான ஒருதொகுதி கற்றல் உபகரணங்களும் அத்தியாவசிய பொருட்களும் வழங்கும் நிகழ்வு கடந்தவாரம் நடைபெற்றுள்ளது.

கனடா திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் 350ற்கும் அதிகமான மாணவர்களுக்கு இப்பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டன.


## நீங்கா நினைவில் 6ம் ஆண்டு

பிறப்பு
27 . 06 . 1939

இறப்பு
30 . 01 . 2019



அமரர். **அன்ரனெற் றோஸ்மலர் வேதநாயகம்(மணி)**

ஆண்டுகள் ஆறு பஞ்சாய் பறந்தாலும் - உன்
நினைவுகளின் நிழல்கள் தொடருதம்மா - உன்
அன்பு மொழி கோட்க ஏங்குகின்றோம் - உன்
கடின உழைப்பும் கல்லறையில் கருகினதோ - உன்
பக்தி பரமனையும் பணித்ததுவோ
உன்னைப் பாரில் நின்று அழைக்க - உன்னை
காணாது ஏங்குகின்றோம்! கலங்குகின்றோம்!

இல.7, அச்சக வீதி
யாழ்ப்பாணம்

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

AD-6

## யாழ். மறைமாவட்டஆணைக்குழுக்களின் செயல்திட்டங்களை சமர்ப்பிக்கும் கூட்டம்



யாழ். மறைமாவட்டத்தில் இயங்கும் மறைமாவட்ட ஆணைக் குழுக்களின் இவ்வருடத்திற்கான செயல்திட்டங்களை சமர்ப்பிக்கும் கூட்டம் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 11ஆம் திகதி நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஆணைக்குழு இயக்குநர்கள் இவ்வருடத்திற்கான செயல்திட்ட அறிக்கைகளை சமர்ப்பித்து அவைதொடர்பான கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

## புனித வின்சென்டிபோல் மத்திய சபை அங்கத்தவர்களுக்கான ஒன்றுகூடல்



பூமியின் அழுகுரலுக்கும் ஏழைகளின் கூக்குரலுக்கும் செவிமடுத்துப் பணியாற்றுங்களென யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அவர்கள் புனித வின்சென்டிபோல் மத்திய சபை அங்கத்தவர்களுடனான சந்திப்பில் அழைப்புவிடுத்துள்ளார்.இச்சந்திப்பு ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை நேகநாயகம் அவர்களின் தலைமையில் யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் கடந்த 04ஆம் திகதி நடைபெற்றது. இதன்போது ஆயர் அவர்கள் மேலும் தெரிவிக்கையில் நாம் வாழும் இப்பூமி எல்லோருக்கும் பொதுவானது. இப்பூமியில் வின்சென்டிப்போல் சபையினர் ஆற்றும் பிறரன்பு பணி மனித மாண்பை காக்கும் உயரிய பணியாக அமைந்துள்ளதுடன் தொடர்ந்தும் அதனை முன்னெடுக்க சபையினர் முனைய வேண்டுமென்பதனையும் வலியுறுத்தினார். இச்சந்திப்பில் புனித வின்சன்ட் டி போல் சபையின் புலமைப்பரிசில் திட்டத்தின் ஊடாக க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தர பரீட்சைகளில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றன. தொடர்ந்து அங்கத்தவர்களுக்கான புதுவருட ஒன்றுகூடல் யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திக் கையெழுத்துப் போராட்டம்



அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி போராளிகள் நலன்புரி சங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட கையெழுத்துப் போராட்டம் கடந்த 06ஆம் திகதி யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமடம் முன்பாக நடைபெற்றது. வட மாகாணத்தின் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கி ஆறு நாட்களாக இடம்பெற்ற இப்போராட்டம் ஏழாவது நாளாக யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இப்போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம், யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம், மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை மங்களராஜா, அகில இலங்கை இந்து மகா மன்ற உப தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், யாழ். மாநகரசபை முன்னாள் மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், யாழ். பல்கலைக்கழக கலைத்துறைப் பீடாதிபதி திரு.ரகுராம், தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொன். ஜங்கரநேசன், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திரு. முருகையா கோமகன், மதத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்களெனப் பலரும் கலந்துகொண்டனர்.

## 'கலைத்தூது அறிவகம்' திறப்பு விழா




கிளிநொச்சி முறிகண்டி திருமறைக்கலாமன்ற வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட் கலைத்தூது அறிவககட்டுமானம் திறப்பு விழா கடந்த 10ஆம் திகதி நடைபெற்றது. திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் திரு. ஜோண்சன் ராஜ்குமார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை பெனற் அவர்கள் கலந்து புதிய கட்டடத்தை ஆசீர்வதித்து திறந்துவைக்க Canada SQM foundation நிறுவன நிறுவுனர் திரு. கமலநாதன் கலந்து நினைவுக்கல்லை திரைநீக்கம் செய்து வைத்தார். இப்பிரதேசபிள்ளைகளின் கலை மேம்பாட்டிற்காக இக்கட்டடம் பயன்படுத்தப்படவுள்ளது. இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள் யாழ். திரு மறைக்கலாமன்ற நிர்வாக உத்தியோகத்தர்கள், அங்கத்தவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

## இன மத நல்லிணக்கப் பொங்கல்





ஆசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் யாழ் மாவட்ட சர்வமதக் குழு உறுப்பினர்களும், சொண்ட் நிறுவனத்தினரும் இணைந்து நடத்திய தைப்பொங்கல் நிகழ்வு யாழ்.சுண்டுக்குழியில் உள்ள சொண்ட் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அருட்பணி செ.ஏன்ஸ்லி றொஷான், கேதீஸ்வரசர்மா குருக்கள், முஹம்மது லெப்பை ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தனர்

## இளையோருக்கான தலைமைத்துவப் பயிற்சி



இலங்கைத் தேசிய கத்தோலிக்க இளையோர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இளையோருக்கான தலைமைத்துவப் பயிற்சி கடந்த 10ஆம், 11ஆம் திகதி குநாகல் மறைமாவட்டத்தின் பன்னல பிரதேசத்தில் அமைந்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் ஒருங்கிணைந்த மனித மேம்பாட்டு மையத்தில் நடைபெற்றது. இயக்குநர் அருட்தந்தை ஹெலன பீரிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் உயர் மறைமாவட்டத் துணை ஆயர் பேரரு ட்தந்தை அன்ரன் ரஞ்சித் அவர்களின் வழிகாட்டலில் நடை பெற்ற இந்நிகழ்வில் இலங்கையின் 12 மறைமாவட்டங்களில் இருந்தும் 150ற்கு மேற்பட்ட இளையோர் கலந்து கொண்டுள்ளனர். இரண்டு நாட்கள் தொடர்ந்த இந்நிகழ்வில் யாழ்.ம.மாவட்டத்திலிருந்து இயக்குநர் அருட்தந்தை பிறாயன் அவர்களுடன் இணைந்து 10 இளையோர் பங்குபற்றியுள்ளனர்.

## நத்தார் கரோல் பாடல் போட்டியில் பளை மாணவர்கள் முன்னணியில்



கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்ட நத்தார் கரோல் பாடல் போட்டியில் தமிழ் மொழிப் பிரிவில் மூன்றாமிடத்தை பெற்றுக்கொண்ட பளை மத்திய கல்லூரி மாணவர்களுக்கான கௌரவிப்பு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களுக்கான வெற்றிக் கிண்ணம், சான்றிதழ்கள், காசோலை என்பன வழங்கி வைக்கப்பட்டதுடன் மாவட்ட பதில் அரசாங்க அதிபர், அரச உத்தியோகத்தர்களென ப்பலரும் கலந்துகொண்டனர்.

## கரோல் பாடல் போட்டில் சுன்னாகம் பங்கு முதலாமிடம்



யாழ் மறைமாவட்ட 2024 ஆண்டுக்கான கரோல் பாடல் போட்டியில் முதல் இடத்தை சுன்னாகம் பங்கு வெற்றி பெற்றுக்கொண்டது. அருட்தந்தை ரேமன் றெனால்ட் அவர்களின் வழிகாட்டலில் ஆசிரியர் கிளாறா அவர்களின் நெறியாள்கையில் இப்பாடலை சுன்னாகப் பங்கு இளையோர் பாடி வெற்றி பெற்றனர்.

**தும்பளை புனித லூர்து மாதா திருத்தலப் பெருவிழா**
**02.02.2025 – 11.02.2025**

02.02.2025 - நவநாள் வழிபாடுகள் - திருச்செபமாலை மாலை 4.30 மணி
10.02.2025 - நற்கருணை தினம் - திருச்செபமாலை மாலை 5.00 மணி

யாழ்.மறைமாவட்டக் குரு முதல்வர்
அருட்தந்தை ப. யோ. ஜெபரட்ணம் தலைமையில்

11.02.2025 (செவ்வாய்) - திருத்தலப் பெருவிழா
திருப்பலிகள்
காலை 5.30 மணி
காலை 7.00 மணி

யாழ். மறைமாவட்ட ஆயர்
பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை
தலைமையில் நடைபெறும்

திருத்தலப் பரிபாலகர்



இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2025ம் ஆண்டு தை மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.